5 லட்சம் சங்குகள் வங்கத்திற்குப் போகின்றன!

REGD. No. M. 6311 PHONE No. 55630

நம் நாடு

தி. மு. க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu": A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F

தனி இதழ்: ஒரு அணா | இலங்கையில் 10 சதம்

சென்னை: ஆனி 23உ புதன் (7—7—54) | வெளியூர்: ஆனி 24உ வியாழன் (6—7—54)

மலர்: 2 | இதழ்: 20

அவைகளின் மதிப்பு ஆறு லட்ச ரூபாய்!

சர்க்காருக்கு பதில் ஒரு வியாபார சங்கம் கொள்முதல் செய்கிறது!

திருநெல்வேலிக்கு அடுத்துள்ள கடற்கரைகளில் கிடைக்கும் சங்குகளை, மேற்கு வங்க சர்க்காருக்கு விற்பதுபற்றி கடிதப் போக்கு வரத்து நடைபெற்று வருவதாக விவசாய மந்திரி பக்தவத்சலனுர் தென்காசியில் குறிப்பிட்டிருந்தார்.

கிடைக்கும் சங்குகளை வாங்கிக்கொள்ளுமாறு, தானே மேல் விழுந்துகொண்டு, வங்க சர்க்காரை வேண்டிக்கொண்டு இருக்கிறது சென்னை சர்க்கார்.

அக்கோரிக்கையை வங்க சர்க்கார் மறுத்துவிட்டு, சங்கு கொள்முதல் செய்ய அங்குள்ள சங்கு வளையல் சங்கத்திற்கு உரிமை கொடுத்திருக்கிறது.

இங்கு கிடைப்பது, ஆண்டு ஒன்றுக்கு சுமார் 10 லட்சம் சங்குகளாகும் எனக் கணக்கிடப்பட்டிருக்கிறது.

அவைகளில் சரி பாதியை, அதாவது 5 லட்சம் சங்குகளை வங்க வியாபார சங்கத்திற்கு விற்க சென்னை சர்க்கார் முன்வந்திருக்கிறது.

அவைகளின் மொத்த மதிப்பு ரூபாய் 6 லட்சமாகிறது!

இதற்கு முன்பாக தனக்குத் தேவையான சங்குகளை இலங்கையிலிருந்தும், மேற்கு கடற்கரை பிரதேசத்திலிருந்தும், வங்கம் வாங்கிக் கொண்டு இருந்தது, சுதந்திரத்திற்குப் பிறகு சென்னையையே நம்பி வாழவேண்டிய கட்டாயம் வங்கத்திற்கு ஏற்பட்டது.

தாமே, மொத்தமாகச் சங்குகளைக் கொள்முதல் செய்துகொள்ளவேண்டுமென, சென்னை சர்க்கார், வங்க சர்க்காரைக் கோரி இருந்தது. அக்கோரிக்கையை ஏற்றுக் கொள்ள வங்க சர்க்கார் ஒப்பாமல், வங்கத்தில் உள்ள சங்கு வளையல் சங்கத்தாரிடம் மொத்தமாக சங்குகளை விற்றுக் கொள்ளவும் என சென்னை சர்க்காருக்கு தனது விருப்பத்தைத் தெரிவித்து விட்டது!

ஐந்து லட்சம் பேர் வேலை நிறுத்தம்!

20,000 சிங்களவர் ஒத்துழைப்பு

3,000 தோட்டங்கள் பாதிக்கப்பட்டன

கொழும்பு, ஜூலை 6— இலங்கை முழுமையும் 5 லட்சம் தோட்டத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர்.

தங்களின் நியாயமான ராஜீய உரிமைகளை வற்புறுத்தவே இந்த ஏற்பாடு.

மொத்தமுள்ள 3000 தோட்டங்களில் ஒன்றில் கூட தொழிலாளர்கள் வேலைக்கு வரவில்லை.

20000 சிங்களத் தொழிலாளர்களும் அனுதாபம் காட்டும் வகையில் இந்த வேலை நிறுத்தத்தில் கலந்துகொண்டனர்.

இதன் மூலம் தொழிலாளர்களுக்கு ரூ. 10 லட்சம் நஷ்டமாகும்.

ஆஞ்சநேயர் 3 துண்டானர்!

'திருவருள்' கிடைக்காத ஏமாற்றத்தால் எரிச்சலடைந்த பூசாரி!

கற்சிலையிடம் கருணை பெற முயன்ற முட்டாள்!

ஆமதாபாத், ஜூலை 6— அனுமனை அர்ச்சித்தான்! இரண்டாண்டுகள் தொடர்ந்து பிரார்த்தனை செய்தான்!

அனுமான் அவனுக்கு அருள் சுரக்கவில்லை.

அனுமான் மீது ஆத்திரம் கொண்டான்; பொறுமை இழந்தான் அந்தப் பூசாரி!

அனுமார் கோவிலுக்கு ஓடினன் வெறி கொண்டவன் போல!

ஆயுதம் கொண்டு சிலையைச் சின்னாபின்னமாக்கினன். 'வேலைக்காரி ஆனந்தனி'லும் ஒரு படி மேலே சென்றுவிட்டான் அந்த அனுமார் பக்தன்!

நாடியாட் என்ற இடத்தில், பாபு லால் என்ற பூசாரிதான் அங்கிருந்த ஆஞ்சநேய 'மூர்த்தி'க்கு இந்த தண்டனை தந்துள்ளார்.

அனுமான் சிலை, குரங்கு கையில் தரப்பட்ட பூமாலை மாதிரிச் சிதறியது கேட்ட பக்தர்கள் பூசாரியைப் பிடித்துக் கொண்டனர். துரத்தினர் கோவிலைவிட்டு, சிலர் குறுக்கிட்டதின் பேரில் பூசாரி பக்தர்களின் சாபத்திற்கு ஆளாகாது தப்பினராம்.

மும்முனைப் போர் முழக்க நாள்

ஜூலை 15-ல் நாடெங்கும் கொண்டாடுக!

★

1953 ஜூலைத் திங்கள் 15-ம் நாள்! திராவிட முன்னேற்றக் கழகத்தின் வரலாற்றில் குறிப்பிடத்தகுந்த சிறப்பிற்குரிய நன்னாள்!

'ஆச்சாரியார் குலத் தொழில் கல்வித் திட்ட எதிர்ப்புப் போராட்டம்', 'கல்லக்குடிப் பெயர் மாற்றப் போராட்டம்', 'நேருவின் ஆணவ மொழி எதிர்ப்பு இரயில் நிறுத்தப் போராட்டம்' ஆகிய மூன்று போராட்டங்களையும் திராவிட முன்னேற்றக் கழகம் துவக்கித் திறம்பட நடத்திக் காட்டி வெற்றி வாகை சூடியது 1953 ஜூலைத் திங்களிலாகும்.

1953 ஜூலை 14-ம் நாள் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் தலைமையில் அமைந்த போராட்டப் படையினர் ஆச்சாரியார் குலத் தொழில் கல்வித் திட்டத்தை எதிர்த்துப் போராட்டத்தைத் துவக்கினர்.

1953 ஜூலை 15-ம் நாள் தோழர் மு. கருணாநிதி அவர்கள் தலைமை தாங்கிய போராட்டப் படையினர் 'டால்மியாபுரம்' என்ற இரயில் நிலையத்தின் பெயரைக் 'கல்லக்குடி' என்று மாற்றும் போராட்டத்தைத் துவக்கினர்.

1953 ஜூலை 15-ம் நாளில் தமிழகமெங்கணும் உள்ள கிளைக் கழகத் தோழர்கள் இரயில் நிறுத்தம் செய்து திராவிடத்தில் வளர்ந்து வரும் சக்தியின் ஆற்றலையும், அளவையும் ஆணவ மொழி பேசிய பண்டித நேருவுக்கு உணர்த்தினர்கள்.

கழகம் நடத்திய மும்முனைப் போராட்டங்களில் பெற்ற வெற்றியினை நினைத்து மகிழவும், பெறவேண்டிய வெற்றியினை நினைத்து ஊக்கம் பெறவும், கிளைக் கழகத் தோழர்கள் ஊர்தோறும் இவ்வாண்டு ஜூலை 15-ம் நாளை மும்முனைப் போர் முழக்க நாளாகக் கொண்டாடும்படி பொதுச்செயலாளர் அவர்கள் கேட்டுக்கொள்கிருர்கள்.

கழகக் கட்டிடங்களிலும், பொது இடங்களிலும் புதுக் கொடி ஏற்றுவித்தல், ஊர்வலங்கள் நடத்துதல், பொதுக்கூட்டங்கள் கூட்டுதல், போராட்டங்களின் வரலாற்றை விளக்கித் துண்டு அறிக்கைகள் வெளியிடுதல், கூட்டங்களில் போராட்டங்களின் அடிப்படைக் கருத்துக்களையும், கழகத் தோழர்கள் பட்ட கஷ்ட நஷ்டங்களையும் விளக்கிக் கூறி, போராட்டத்தில் கலந்துகொண்ட வீரர்களுக்கு நன்றி தெரிவித்தல் ஆகிய முறைகளில் ஜூலை 15-ம் நாளைக் கொண்டாடும்படி கிளைக் கழகத்தார் எல்லோரும் வேண்டிக்கொள்ளப்படுகிருர்கள்.

அரசியலாரின் அனுமதி பெற்று நடத்த வேண்டிய பொதுக்கூட்ட ஊர்வலங்களை அனுமதி பெற்று நடத்தவும், அமைதி—கண்ணியம்—கட்டுப்பாடு ஆகியவை குலையாமல் காத்துக்கொள்ளவும் ஆன முறைகளில் ஜூலை 15-ஐக் கொண்டாடுவீர்களாக!

தலைமை நிலையம்
சென்னை-13
6—7—54

இரா. நெடுஞ்செழியன்,
துணைச் செயலாளர்.
திராவிட முன்னேற்றக் கழகம்,

சூ - என் - லாய் — ஹோசிமின் சந்திப்பு

ஹாங்காங், ஜூலை 6— சீனப் பிரதமர் சூ-என்-லாய் வியட்மின் எல்லையில் டாக்டர் ஹோசிமினை சந்தித்துப் பேசினர்.

டாக்டர் ஹோசிமின் வியட்மின் விடுதலை வீரர்; வியட்மின் குடியரசின் தலைவர்.

இந்தியாவுடன் பேச பிரான்ஸ் முன்வருகிறது

பாரிஸ், ஜூலை 6— இந்தியாவில் உள்ள பிரெஞ்சிந்திய நிட்டுகளின் எதிர்காலம் பற்றி இந்தியாவுடன் பேச்சு வார்த்தைகளை மீண்டும் துவக்க பிரெஞ்சு மந்திரி சபை அவசரமாகக் கூடி ஆலோசனை செய்தது.

புதுடில்லியில் உள்ள பிரெஞ்சுத் தூதர் இது பற்றி பண்டித நேருவுடன் தொடர்பு கொண்டிருக்கிறார் என்று தெரிகிறது.

ஐ. நா. பொதுசபை

அவசரமாகக் கூடும்

லண்டன், ஜூலை 6— ஐ. நா. பொதுசபையின் தலைவர் விஜயலட்சுமி பண்டிட் அமெரிக்காவுக்குத் திரும்பியவுடன், ஐ. நா. பொதுச் சபையை அவசரமாகக் கூட்டுவார் என்று தெரிகிறது.

திருமதி பண்டிட் இங்கிலாந்தில் ஓய்வெடுக்க சிலகாலம் தங்கியிருக்க முன்னர் திட்டமிட்டிருந்தார். இப்போது அக்காலத்தைக் குறைக்கவேண்டியிருக்கும் என்று தெரிகிறது. இம்மாதம் 15-ம் தேதி வாக்கில் அவர் நியூயார்க் செல்லக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

லண்டனில் பிரிட்டிஷ் அரசி திருமதி பண்டிட்டுக்கு பேட்டி யளித்தார்.

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 7—7—54 புதன்

ஆத்ம தீபத்தின் அலங்கோலம்!

மேனாட்டினர் கூறிக் கொள்ளுகின்றனர் பெருமையாக, தாங்கள் இயற்கையை அடிமை கொண்ட, அதிஅற்புத சாதனைகளை! நேருக்கு நேராக, அதற்குத் துணை நின்ற விஞ்ஞான கருவிகளையும் காட்டி, தங்கள் கட்சியை நிலைநாட்டிக் கொள்ளுகின்றனர்.

இந்தியத் துணைக் கண்டத்தில் உள்ள மகான் வழி வந்தவர்களும், ஆரிய ரிஷி பரம்பரையினரும், அந்த விஞ்ஞானக் கருவிகள் தரும் சுக வாழ்வை, தினம் தினம் முழு திருப்தியோடு அனுபவித்துக் கொண்டும் இருக்கின்றனர். அதே நேரத்தில், அக்கருவிகளைக் கண்டுபிடித்ததற்காகத் தங்கள் அறிவுத் திறனை வியந்து கூறுவதைக் கேட்டு மனம் பொறுதவர்களாய், இங்குள்ள ஆரிய திருக்குமாரர்கள், வெட்கத்திற்கு பலியானதோடு, துக்கத்திற்கும் இரையாகி, விஞ்ஞான வித்தகர் வழி வந்த மேனாட்டினர்பால் அழுக்காறும் கொள்ளுகின்றனர்!

விஞ்ஞானம் புதுமைகளைத் தந்து உதவிய மேனாட்டவர் முன்பாக, தலை கவிழ்ந்து நிற்பதால், தங்கள் உள்ளத்தைக் கப்பிக்கொள்ளும் 'தாழ்வு உணர்வு' புரியும் கோரத் திருவிளையாடலுக்குத், தங்களையும் அறியாமல் ஆளாகிவிடுகின்றனர், ஆரிய குல மணிகள்! அத் 'தாழ்வு உணர்வி'ன் தூண்டுதலுக்கு ஆளானதின் பலனாக, மேனாட்டினர் வாயடங்க, தங்கள் உள்ளமும் சாந்தி அடைவதற்காக, தங்களிடத்தில்மட்டுமே என்றென்றும் நிரந்தரமாகத் தேங்கிக் கிடந்ததெனக் கற்பனைசெய்து கொண்டு, 'ஆத்ம தீபத்தை'த் தூக்கிப் பிடிக்கிறார்கள், பாரத புத்திரர்கள்! அதனால், ஆறுதல் பெற்று விட்டதாகவும் மனமார நம்புகிறார்கள்—இல்லை—நம்புவது போன்று நடிக்கிறார்கள்! இவர்களைப் போன்றே, இவர்கள் பித்தலைச் செவிமடுக்கும் மேனாட்டவரும், இவர் கூறும் கற்பனை 'ஆத்ம தீபத்தில்' பேரறிவும் செருக்திறனும் அடங்கி இருப்பதாகத் தாங்கள் ஒப்புவதுபோல் நடித்துக் காட்டுகின்றனர்! அந்த நடிப்பின், நாணயமும் நேர்மையும் நிரம்பி இருப்பதாக எண்ணி, முன்புங்கவரை மூதாதையர்களாகக் கொண்டவர்களின் முகமும் அகமும் குளிர்ந்து விடுகிறது!

உலகத்திற்கு, 'ஆத்ம தீப' ஒளியைக் காட்டிய பாரதம், தன் குடிமக்களை எவ்வளவு அலங்கோலமான நிலையில் வைத்திருக்கிறது என்பதை, ஏற்கனவே பலர் சுட்டிக் காட்டியுள்ளனர். ஆத்ம அறிவு வெள்ளம் பெருக்கெடுத்தோடிக் கிடந்த நாட்டின் மக்கள், அப்பழுக்கற்ற அறநெறி வாழ்க்கையை மேற்கொண்டவர்களாகக் கட்டாயம் இருந்து தீரவேண்டும். அதுதான் முறை; அதைத்தான் நியாயமானது எனவும் உலகம் ஒப்பும்.

ஆனால், நாட்டு மக்களிடையே காணப்பட்ட—காணப்படும் ஒழுக்கக்கேடு, உலகத்தில் வேறு எந்த நாட்டு மக்களிடமும் காணப்படாத தரத்திலும் தன்மையிலும் உள்ளது. சிறந்த ஆத்ம ஞானம், அறவழி தழைத்த மக்களைக் கொண்டிருக்கிறது என்பது, ஒன்றுக்கொன்று முரண்பாடு உடையதாகும். ஆத்ம அறிவு உயர்வானதாக இருந்தால், அதன் வழிவந்த மக்களிடமும், அதன் உயர்வு காணப்பட்டாக வேண்டும். மக்களின் ஒவ்வொரு செயலிலும், அந்த ஆத்ம ஞானம் பிரதிபலித்துக் கொண்டிருக்க வேண்டும். ஆனால், இத்தகு நிலை, இருக்கக் காணோம் மக்களிடம்! என்றும் இருந்ததாகவும், நாம் ஏட்டில் காணவுமில்லை! நாட்டு வரலாறு இந்த மகத்தான உண்மையைத்தான் வலியுறுத்திக் கொண்டு இருக்கிறது.

'ஆத்ம தீபம்' பாரத பூமியில் மட்டும்தான் ஒளி வீசிக் கொண்டு இருந்தது என்பது வீணர்களின் வாயுரை! வஞ்சகர்களின் மாய்மாலப் பேச்சு! எத்தர்களின் ஏட்டுச் சொல்! ஏமாளிகளின் பகட்டு மொழி! தாளைப் போலப் பெண்! தாலைப் போல சேலை!

'ஆத்ம ஞானத்'தில் அவனியுள்ளோர்க்கெல்லாம், ஆரிய வர்த்தம் வழி காட்டிற்று என்பது ஊற்றுக்கு நிற்காத வாதம், என்பதை இன்று நாட்டு மக்களிடம் காணப்பெறும் ஒழுக்கக்கேடு, மெய்ப்பித்துக் காட்டிக்கொண்டிருக்கிறது!

இந்த அலங்கோலம் சுட்டிக் காட்டப்படுகிறது—நம்மால் மட்டுமல்ல — இந்திய அறங்கூறும் தலைமை மன்றத்தின் முதன்மை நீதிபதி மகாஜன் அவர்களால்! எங்கோ சாதாரண மக்கள் கூடும் கடற்கரையில், முச்சந்தி முனையில் அல்ல, நீதிபதி மகாஜன் அவர்கள் அவ்வாறு குறை கூறியது!

யூனியன் அரசாங்கத்தின் உள்நாட்டு அமைச்சராக இருக்கிறாரே, மக்களின் உரிமையைப் பறிப்பதில் ஏகாதிபத்திய வெறியர்களையும் தோற்றுப் புறமுதுகிடச் செய்யும் ஆற்றலை பெற்றுள்ள கனம் கைலாசநாத் கட்ஜூ, அவருக்கு எழுதியுள்ள முடங்கலின் விளக்கமாகக் கூறியுள்ளார், நாட்டு மக்களிடம் தாம் காணும் குறைபாட்டை!

அந்த நீண்டக் கடிதத்தில், தாம் காணும் குறைபாடுகள் அனைத்தும், சாதாரண குடிமக்களிடம் காணப்படுவனவாகக் கூறவில்லை, அந்த அறங்கூறும் அறிஞர்! அறங் கூறும் அவையில் அமர்ந்துள்ள அறவோர் இடம், அறத்தின் நீங்கிய தன்மை இருக்கிறதே என, இரத்தக் கண்ணீர் சொரிந்திருக்கிறார் நீதிபதி மகாஜன்!

அக்கிரமத்தை அழித்து, நீதியை நிலைநாட்ட வேண்டிய வழக்கறிஞர்களிடம், அறநெறி, மகதி கை மாலையாகிறதே என, மனம் வெம்பி விம்மி இருக்கிறார் நீதிபதி மகாஜன்!

நீதி மன்றம் ஏறி வழக்குரைக்கும் குடி மக்களின் நாவில், பொய் நர்த்தனமாடுகிறதே என மனமுடைந்து சாடி இருக்கிறார், பெரும்பான்மையான மக்களின் மனோநிலையை நீதிபதி மகாஜன்!

பாதுகாப்புத் துறையினர் மேற்கொண்டு வரும் முறையற்ற முறையினை, இதயத் துடிப்போடு இயம்பி இருக்கிறார், நீதிபதி மகாஜன்!

பிரிட்டிஷார் உருவாக்கி நிர்வகித்து வந்ததும், நடைமுறையில் இருந்து வருவதுமான அறங் கூறும் அமைப்பிலே, கோளாறு இல்லை, அறவே இல்லை; இருக்கும் கோளாறு எல்லாம் அதை இயக்கும் கரங்களில்தான் இருக்கிறது என முதன்மை நீதிபதி இடித்துரைத்திருக்கிறார்!

சட்டத்தைக் காட்டி அச்சமூட்டி குற்றம் புரிவதிலிருந்து குடிமக்களைத் தடுக்கப் பார்ப்பது கூடாது; குடிமக்களை நல்ல முறையில் அறநெறியைப் பின்பற்றுபவர்களாக ஆக்க வேண்டும்; அத்தகைய குடிமக்களைக் கொண்ட சமூகம்தான் நாகரீகமான சமுதாயமாகக் கொள்ளப்படும் எனவும் நீதிபதி எடுத்துக் காட்டியுள்ளார்.

பற்பல முறைகளில் அறிவொளியைப் புகுத்தி மன மாசைத் துடைக்க வேண்டிய இருக்க, ஆட்சிபீடமேறியிருப்பவரோ, இயற்றப்படும் சட்டங்கள் அலட்சியப்படுத்தப்படுவதாக இருந்தாலும், எதற்கெடுத்தாலும் வகை வகையான சட்டங்களை இயற்றுவதில் கருத்துடையவர்களாக இருக்கிறார்கள் என மகாஜன் ஆட்சியாளர்களின் அர்த்தமற்ற போக்கிற்கும் கண்டனம் தெரிவித்திருக்கிறார்!

'ஆத்ம தீபத்'தை ஏந்தியுள்ள மக்கள், மன இருள் நீங்காதவர்களாக, அறநெறியைத் துறந்து, வன விலங்கு நிலையில் உள்ளனர் என்று தலைமை அறங்கூறும் மன்ற முதன்மை நீதிபதி மகாஜன் எடுத்தியம்பியுள்ளார். என்ன பதில் இருக்கிறது, அவர் குற்றச்சாட்டுகளுக்கு மாற்றமாகக் கூற?

கூடம் கோணலாக இல்லை! ஆடத் தெரியாத ஆட்டக்காரிதான், கூடம், கோணல் என்கிறாள்! நீதிபதி மகாஜன் அவர்கள் தரும் விளக்கம் இதுதான்!

'ஆத்ம ஞானம்!' 'ஆத்ம தீபம்!' எனப் பிதற்றித் திரிவது, வெறும் ஏமாற்று வித்தை என்பதை கூறாமல் கூறிய நீதிபதி அவர்களை, நாம் மனமாரப் பாராட்டுகிறோம்.

அவர் கூறியவற்றை கேற்றை 'நம் நாடு' இதழில், முழு அளவில் வெளியிட்டுள்ளோம். அன்பர்கள், பல முறை, அதைக் கருத்தூன்றி படிப்பார்களாக!

அகதிகளுக்கு யோகம்!

இரும்பு, மோட்டார் தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்படுமாம்!

அகதிகள் வாழ்வுக்கு அன்னிய மூலதனம் வருகிறது

பரிதாபாத், ஜூலை 6—

அகதிகள் வாழுமிடமான பரிதாபாத்தில் இரும்புத் தொழிற்சாலை ஒன்றை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் மத்திய அகதி இலாகா அமைச்சர் ஜெயின் பல தொழில்களை பரிதாபாத்தில் ஆரம்பிக்க தனிப்பட்ட முதலாளிகள் ஒப்புக் கொண்டிருக்கின்றனர் என்று கூறினார்.

பரிதாபாத்தில் 2,0000 அகதிகள் வாழ்கின்றனர். இந்நகரம் டில்லியிலிருந்து 20 மைல் தொலைவில் இருக்கிறது.

தொழில்களை ஆரம்பிக்கும் தனிப்பட்ட முதலாளிகளுக்கு இந்திய சர்க்கார் பண உதவி செய்யுமென்றும் அமைச்சர் ஜெயின் கூறினார்.

இதன்படி பிரிட்டிஷ் இந்திய மூலதனங்களைக் கொண்டு கைகின் தொழிற்சாலை ஒன்று ஆரம்பிக்கப்படுமாம். அத்துடன் கூட கார்பன் தொழிற்சாலை ஒன்றும், ஆரம்பிக்கப்படுமென்றும் கூறினார்.

மோட்டார் பாகங்களை இணைக்கும் தொழிற்சாலை ஒன்றும் பரிதாபாதில் ஆரம்பிக்கப்படும் என்று தெரிகிறது.

நாங்கள் சரியான பாதையில் செல்லுதால் பரிதாபாத் அகதிகளிடையே காணப்படும் வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிந்துபோகுமென்று அமைச்சர் ஜெயின் கூறினார்.

அகதிகள் வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்பட அனைவரும் ஒத்துழைக்க வேண்டுமென்றும், தொழிலாளர்களும், தொழில் அதிபர்களும் ஒன்று சேர்ந்து பரிதாபாதில் கூட்டு முயற்சியில் தொழில்களை அமைக்க வேண்டுமென்றும், மந்திரியார் கூறினார்.

சிறு குடிசைத் தொழில்களை ஆரம்பிக்க அகதிகளுக்கு உதவ வேண்டுமென்றும், அவர்கள் வீட்டிலே செய்கிற பொருள்களை தொழில் அதிபர்கள் வாங்க வேண்டுமென்றும் ஜெயின் மேலும் கூறினார்.

அகதிகள் இந்த பரிதாபாத் நகரில் வேலையில்லாமையால் எவ்வளவு துயரம் கஷ்டப்பட்டார்கள் என்பது எனக்குத் தெரியும், ஆனால், அவர்கள் துயரமெல்லாம் பழங்காலச் சம்பவங்களாக சீக்கிரமே மாறிவிடும் என்று நான் நம்புகிறேன்.

உத்தேச அரசியல் சட்ட திருத்தம் உரிமைகளுக்கு உலை வைப்பது!

காங்கிரசின் இந்த விபரீதப் போக்கு கண்டிக்கத்தக்கது!

தட்சிண சபைக் கவுன்சிலின் எச்சரிக்கை!

பூனா ஜூலை 4—

"'இந்திய அரசியல் சட்டத்தின் 19 (2)-வது பிரிவைத் திருத்த வேண்டும்,' எனும், அகில இந்திய காங்கிரஸ் செயற் குழு நியமித்த உப குழுவின் முடிவு, இன்று, பத்திரிகைகளுக்குத் தரப்பட்டிருக்கும் சுதந்திரத்திற்கு ஒரு முடிவு கட்டிவிடும்; பல விஷயங்களில் நீதிமன்றங்களின் அதிகாரங்களைப் போக்கடித்து விடுவதின்மூலம், தனி மனிதனின் உரிமைகள் வெகுவாகக் கட்டுப்படுத்தப்படும்.'

"காங்கிரசின் இந்த முடிவு, சர்க்கார் பின்பற்றும் கொள்கைகளுக்கு மாறாக நீதிமன்றங்களின் முடிவுகள் இருந்தால், அதற்காக அரசியல் சட்டத்தைத் திருத்தி, அது எவ்வளவுதான் அரசியல் சட்டத்தின் நோக்கத்திற்கு முரண்பாடானதாயினும் பொருட்படுத்தாது, உரிமைகளைக் கட்டுப்படுத்துவதற்கு காங்கிரஸ் கட்சி எப்போதும் தயாராகவே இருக்கிறது என்பதைக் காட்டுகிறது. அடிப்படை உரிமைகளைப் பறிக்கும் காங்கிரசின் இந்த விபரீதப் போக்கு, கண்டிக்கத்தக்கதும், பரிதாபத்திற்குரியதும் ஆகும்."

—இவ்வாறு, காங்கிரஸ் செயற் குழுவின் உத்தேச, அரசியல் சட்ட திருத்தத்தை எதிர்த்து, தட்சண சபைக் கவுன்சில் எச்சரித்துள்ளது.

'எடுத்துக் கொள்ளப்பட்ட சொத்துக்களுக்கு, நஷ்டஈடு தர வேண்டும் என்பதற்கு திருத்தம் கொண்டு வருவது, மொத்தத்தின் சொத்துரிமையையே பறிப்பதாகும்,'' என்றும் அந்தக் கவுன்சில் கூறியுள்ளது.

போதனை மொழி விஷயத்தில் பம்பாய் சர்க்காரின் கொள்கை பற்றி 'சுப்ரீம் கவுன்சில்' செய்துள்ள முடிவின்படி அரசியல் சட்டம் திருத்தப்படலாம் என்ற காங்கிரஸ் செயலாளர் அகர்வாலின் சமீபத்திய அறிக்கை பற்றியும் அந்தக் 'கவுன்சில்' குறிப்பிட்டுள்ளது.

உணவுகட்டுப்பாடு ஒழிந்தது!

இங்கிலாந்தில், உணவு கட்டுப்பாடு ஒழிக்கப்பட்டது அதன் அறிகுறியாக ஒரு பெரிய 'ரேஷன்' புத்தகம் உணவு மந்திரி 'ஜாப்ரே லாயிட்' என்பவரால் கூட்டமொன்றில் கொளுத்தப்பட்டது.

எல்லா உணவுப் பொருள்களின் மீதிருந்த கட்டுப்பாடுகளும் ஒழிந்ததை முன்னிட்டு நடந்த விழாக் கூட்டத்தில்தான் ரேஷன் புத்தகம் கொளுத்தப்பட்டது. இந்தக் கட்டுப்பாடுகள் இரண்டாம் உலக யுத்தத்தின் போது அமுலுக்கு வந்தன.

உணவு மந்திரி, கூட்டத்தில் பேசுகையில், "இன்னும் நிலக்கரி கட்டுப்பாடு செய்யவேண்டிய பொருளாகவே இருக்கிறது; நாட்டின் தேவையை பூர்த்தி செய்யும் அளவு, அரசாங்க நிலக்கரிச் சுரங்கங்களில் உற்பத்தியாகும் வரை, நிலக்கரி, கட்டுப்பாடு செய்யப்படும் பொருளாகவே இருக்கும்," என்றார்.

அபாயமில்லையாம்!

அணுகுண்டு வெடித்த பிறகு ஏற்படும் கதிரியக்கம் சில குறிப்பிட்ட வரம்புக்குள் மக்களுக்கோ, மிருகங்களுக்கோ, பயிர்களுக்கோ கெடுதி விளைவிக்காது என அமெரிக்க விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

காமன்வெல்தில் கலகமூட்டும் நாரதராம் இந்தியா!

தவறு செய்துவிட்டு முதலைக் கண்ணீர் விடுகிறதாம்!

உழவர் மாநாடு ஒத்திவைப்பு

"கோவை மாவட்ட உழவர் மாநாட்டை ஜூலை 10, 11, 12 ஆகிய தேதிகளில் பல்லடத்தில் நடத்துவதாக அறிவித்திருந்தோம்: ஆனால், அந்தத் தேதிகளில், முதலமைச்சர் காமராஜர் அவர்களுக்கும் தோழர் அண்ணாதுரை அவர்களுக்கும் முக்கிய அலுவல்கள் இருப்பதால் தேதியை மாற்றி அமைக்குமாறு அவர்கள் விரும்பியதால், மாநாட்டுத் தேதியை அவர்கள் விருப்பப்படி மாற்றியுள்ளோம். மாநாடு ஆகஸ்டு மாதம் நடைபெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்வதோடு கூடிய விரைவில் தேதியைத் தெரியப்படுத்துகிறோம்," என்று வரவேற்புக் குழுவினர் அறிவிக்கின்றனர்.

தெ. ஆ. நிறவெறி இதழின் ஒப்பாரி!

கேப்டவுன், ஜூலை 7—

"இந்தியா ஒரு நல்ல முடிவிற்கு வருவதற்காக, தென் ஆப்பிரிக்கா வெகு பொறுமையோடு நீண்ட நாள் காத்திருந்து விட்டது,"

என்று தென் ஆப்பிரிக்க - இந்திய அரசியல் உறவு முறிவு குறித்து எழும்போது 'டைபர்ஜர்' என்ற 'மலான்' இதழ் எழுதியுள்ளது.

அது மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:—

"எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு தென் ஆப்பிரிக்கா, இனியும் பொறுத்திருக்க முடியாது, பொறுத்தது போதும் என்ற முடிவுக்கு வந்துள்ளது. இந்த முடிவு, டெல்லியில் முதலைக் கண்ணீர் வடிக்கும்படி செய்துள்ளது.

இந்தியா, தன்னுடைய அண்டை நாடுகளான பாகிஸ்தான், கொழும்பு போன்றவைகளுடனும், பிரான்ஸ், காமன்வெல்த் போன்றவைகளுடனும், சண்டை வளர்த்துக்கொள்வதில் முன்நிற்கிறது. பிறகு, 'தான்தான் முற்றிலும் சரியான பாதையில் செல்வதாக'ச் சாதிப்பதை உலகம் நம்ப மறுக்கும்போது நீலிக் கண்ணீர் வடிக்கிறது."

ஆஸ்திரேலியாவில் உள்ள இந்தியத் தூதுவர் கரியப்பா சமீபத்தில் அங்கு பேசியவற்றைக் குறிப்பிட்டுவிட்டு அந்த பத்திரிகை மேலும் எழுதுகிறது:—

"எங்கெல்லாம் இந்தியர்கள் மைனாரிட்டியாக இருக்கிறார்களோ அங்கெல்லாம் அவர்களுக்கு ஏதாவது குறை இருப்பதாக இந்தியா சொல்கிறது. இந்தவிதமான குற்றச்சாட்டுதலைக் கண்டு அண்டை நாட்டவர்கள் அலுத்துப் போய்விட்டனர். சுதந்திரம் பெற்ற சில ஆண்டுகளில் நேரு ஒரு வீரனாகக் காட்சி தந்துக் கொண்டிருந்த பிரிட்டன்கூட இன்று நாளாவட்டத்தில் களைத்து போய்விட்டிருக்கிறது. பல ஆண்டுகளுக்கு முன்பாக தென் ஆப்பிரிக்கா உணர்ந்து கொண்டதை இன்றுதான் பிரிட்டன் உணரத் தலைப்பட்டிருக்கிறது. அதாவது, இந்தியா எப்பொழுதும் திருப்திபடுத்தப்பட முடியாத ஒன்று; அதுதான், காமன்வெல்த்தில் பிணக்குகளை உண்டுபண்ணுவதற்கும் காரணம். அதற்குத் தகுந்த முறையிலே இனி இந்தியா நடத்தப்படவேண்டியிருக்கும் என்பது எதிர்பார்க்கக் கூடியதே."

சிறையில் கலகம்?

கைதிகளிடையே ஜெகன் அரசியல் பிரசாரம் செய்கிறாராம்!

கைதிகளைப் பிரிக்க கயானா சர்க்கார் ஏற்பாடு

ஜார்ஜ் டவுன், ஜூலை 6—

நகரில் உள்ள சிறையில் இருக்கும் அரசியல் தலைவர்களையும், மற்ற கைதிகளையும் எப்படிப் பிரித்து வைப்பதென்று சிறை அதிகாரிகள் யோசிக்கின்றனர். சிறைக்குள் கலகம் ஏற்படும் என்று அதிகாரிகள் அஞ்சுவதாலேயே இந்த பிரித்துவைக்கும் கட்டாயமான நிலை சர்க்கார் அதிகாரிகளுக்கு ஏற்பட்டுவிட்டது.

சிறையில் இருக்கும் கயானா முன்னாள் பிரதமர் ஜெகனின் பேச்சுகள் கைதிகளைத் தூண்டிவிடுகின்றன என்று நம்பப்படுகிறது. ஆகவே சிறையில் கைதிகளிடையே ஜகன் பேசக் கூடாதென்று உத்தரவிடப்பட்டது.

இதை எதிர்த்து கைதிகள் ஞாயிறு அன்று நடைபெறும் மத விவாத மேடைக்கு வர மறுத்து விட்டனர் என்று தெரிகிறது.

டாக்டர் ஜெகனும் அவரது நண்பர்களும் சிறையில் கைதிகளிடையே அரசியல் உணர்ச்சியைத் தூண்டுகின்றனர்; ஆகவே, கைதிகளைப் பரிசோதனை செய்ய வேண்டியது அவசியமாகிறது என்று சர்க்கார் அதிகாரிகள் கூறுகின்றனர்.

"பஞ்சமும் - பிணியும் பரவுவதற்குக் காரணமென்ன?"

— (:) —

"திராவிடம் பிரிந்தாலன்றி வாழ்வில் வளம் காண இயலாது"

ஆவடியில் முன்னணி வீரர்கள் முழக்கம்

சென்னை, ஜூலை 7—

4—7—54 மாலை 6 மணிக்கு ஆவடி தி. மு கழகச் சார்பில், ஏரி மைதானத்தில், தோழர் சி. வி. எம். அண்ணாமலை தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. பல்லாயிரக்கணக்கான மக்கள் சுற்றுப்புற கிராமங்களிலிருந்தும் பெருந்திரளாகக் குழுமியிருந்தனர். வீதிகளிலெல்லாம் வரவேற்பு வளைவுகளாலும், கொடிகளாலும் நன்கு அலங்கரிக்கப் பட்டிருந்தது. தோழர் இராசரத்தினம் குழுவினர் இன்னிசை ஆரம்பத்தில் நடைபெற்றது, தோழர் ஈஸ்வரன் எல்லோரையும் வரவேற்றுப் பேசுகையில், கல்வி வசதி, குடி தண்ணீர், குடி இருப்பு வசதிகள் ஆகியவைகளை மக்களுக்குச் செய்து கொடுக்க வேண்டுமென்று தோழர் டி. சண்முகம் எம். எல். ஏ. அவர்களிடம் கேட்டுக் கொண்டார்.

தலைவர் பேசுகையில், தி மு கழகக் கொள்கைகளையும், மக்களுக்குச் செய்துவரும் நற்பணிகளையும் விளக்கினார்.

தோழர் அ பொன்னம்பலனார், டி. சண்முகம், எம்.எல்.ஏ, பொதுச் செயலாளர் அண்ணாதுரை ஆகியவர்கள் திராவிட நாடு, திராவிடருக்குக் கிடைத்தால்தான் நம் நாடும் வளம் பெறும்—மக்கள் வாழ்வும் உயரும் என்றும், சமூகத்தில் உயர்வு—தாழ்வு—பேதம் உள்ளவரையில் அரசியல்—பொருளாதாரம்—விடுதலை எழுச்சி ஏற்பட முடியாதென்றும் குறிப்பிட்டனர்.

மதம் - கடவுள் - மோட்ச - நரகம் - விதி ஆகியவைகளின் பெயரால் நடைபெறும் அறிவற்ற செய்கைகளை ஒழிக்கவும், மூடநம்பிக்கையின் பெயரால் நடைபெறும் மடமைகளை நீக்கவும் மக்கள் முன்வர வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டனர்.

உணவு, உடை, குடியிருக்க வீடு ஆகிய பொது வசதிகளை சர்க்கார் பொறுப்பில் எல்லா மக்கட்கும் கிடைக்கும்படி செய்ய வேண்டும் என்று கோரினர்.

நாம் கொடுக்கும் வரிப் பணத்திலேயே வடநாட்டார் பெரும் பகுதியைச் சுரண்டிக் கொண்டு, வடநாடு வளம் பெறத் திட்டம் அமைப்பதையும், திராவிடம் தேய்ந்து வருவதையும் வறுமை, பட்டினி, பஞ்சம் ஆகியவைகளால் மக்கள் பாதிக்கப்படுவதையும், வடவர் கவலையின்றி வாழ்வதையும் சுட்டிக் காட்டினர்.

இராணுவம், அடக்குமுறை, சட்டம், போலீஸ், சிறை ஆகியவைகளைக் கொண்டே ஆட்சியை நடத்தலாம் என்ற போக்கில் வடநாட்டார் ஆதிக்கம் செலுத்த முயலுகிறார்கள் என்று குறிப்பிட்டனர்.

வடநாட்டு டில்லி சர்க்கார்—சென்னை சர்க்கார் ஆகிய இரண்டு சர்க்கார்களுக்கும் வரியைக் கொடுத்துவிட்டு நம் மக்கள் போதிய வாழ்க்கை வசதிகளின்றி அவதிப்படுகிறார்கள் என்றும், இந்த அடிமை நிலை—இழிநிலை ஒழிவதற்கு நாம் போராட வேண்டியுள்ளதென்றும் இதற்காக தி. மு. கழகத்தின் மூலம் ஆற்றிவரும் நற்பணிக்கு மக்கள் ஆதரவு அளித்து, நாம் ஆண்ட நாட்டை — வளமார் திராவிடத்தை மீட்க வேண்டுமென்றும் கூறினார்கள்.

பிரிந்த திராவிடத்தில்தான், சாதிமத சமயப் பூசல்கள், ஆண்டான் - அடிமை என்ற முறையின்றி, 'ஒன்றே குலம்—ஒருவனே தேவன்' என்ற நெறியில் எல்லா மக்கட்கும் சம உரிமை, உணவு, உடை, இடம், கல்வி அறிவு வசதி, தொழில் வளர்ச்சி, மருத்துவ வசதி, ஓய்வு, வாழ்க்கைக்குப் பாதுகாப்பு ஆகியவைகள் ஏற்படும்படி செய்ய முடியும் என்று குறிப்பிட்டு விரிவுரையாற்றினர்.

பொருட் செயலாளர் அவர்கட்கு பல கிளைச் சங்கங்கள், உள்ளூர் தி. மு. கழகம், தொழிலாளர் சங்கம் ஆகியவைகளின் சார்பில் மலர் மாலைகள் சூட்டப்பட்டது; கைத்தறி ஆடை வழங்கப்பட்டது, தலைவர் முடிவுரைக்குப் பிறகு நன்றி கூறுதலுடன் இரவு 9 மணிக்கு கூட்டம் முடிவுற்றது.

பொய் வழக்கு ஜோடித்த போலீசார் போக்குக்கு நீதிபதி கண்டனம்!

செய்தி சொன்னவர் சாட்சியாக்கப்பட்ட விந்தை!

குற்றம் சாட்டப்பட்டவர் விடுதலையானார்

"போலீசார் தங்களுக்குச் சேதி சொன்னவரையே ஒரே சர்க்கார் தரப்பு சாட்சியாக ஏற்றுக்கொண்டது மிகவும் நியாயமற்றது; மணியினுடைய வீட்டை போலீசார் சோதனையிட்டது சட்ட விரோதமானது; அவள் மீதுள்ள வழக்கும் பொய்யானது; ஆகவே அவளை விடுதலை செய்கிறேன்,"

—இவ்வாறு பல்சார் மாவட்ட நீதிபதி, மணி என்ற ஒரு வேலைக்காரப் பெண்மணி மீது தொடரப்பட்ட மது விலக்கு வழக்கில் தீர்ப்பளிக்கையில் குறிப்பிட்டார்.

வழக்கின்போது அந்தப் பெண்மணி அழுதுகொண்டே கூறியவற்றை நீதிபதி ஏற்றுக்கொண்டார். அந்தப் பெண்மணி கூறியதாவது:—

"என் மீது தவறாக, மதுவிலக்குச் சட்டத்தை மீறியதாகப் போலீசார் பொய் வழக்கு போட்டிருக்கின்றனர். நானும், என் கணவரும் வீட்டில் இல்லாதபோது, குற்றம் சாட்டுவதற்குரிய பொருள்களை வீட்டினுள் வைத்துவிட்டுச் சென்றிருக்கின்றனர்.

"நாங்கள் குடியிருக்கும் வீட்டைக் காலி செய்யுமாறு எங்கள் வீட்டுக்காரர் கேட்டார்; நாங்கள் மறுத்துவிட்டோம்.

"பின்னர், ஒருநாள், போலீசார், எங்கள் வீட்டிற்கு இந்த வீட்டுக்காரரை சாட்சி மாதிரி நடிக்கச் செய்து அழைத்து வந்து என்மீது மதுவிலக்குச் சட்டப்படி குற்றம் சாட்டியிருப்பதாக அழைத்துச் சென்றுவிட்டனர்."

வீட்டுக்காரரை குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது, தான் போலீசாரை மணி வீட்டிற்கு இட்டுச் சென்றது உண்மைதான் எனவும், போலீசார் சோதனையிட்டபோது, தன்னைத் தவிர வேறு எந்த சாட்சியும் இருக்கவில்லை எனவும் ஒப்புக் கொண்டார். அதன் பேரிலேயே நீதிபதி மேற்கண்டவாறு தீர்ப்பு வழங்கினார்.

சித்தூர் மாவட்ட தி. மு. க. மாநாடுகள்

10, 11—7—54-ந் தேதிகளில் பொதட்டூர்பேட்டையில்
லால்குடி நடராசன் பந்தல்—பொட்டி சீராமுலு அரங்கில் நடைபெறும்

10—7—54 சனிக்கிழமை :	11—7—54 ஞாயிற்றுக்கிழமை ;
சமூக சீர்திருத்த மாநாடு	அரசியல் மாநாடு
தலைவர்: அ. பொன்னம்பலனார்	தலைவர்: ஏ. எல். சி. கிருஷ்ணசாமி
திறப்பாளர்: கே. ஆர் ராமசாமி	திறப்பாளர்: இராம. அரங்கண்ணல்

இரு நாட்களிலும் தி. மு. கழகப் பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்களும் இயக்க முன்னணி வீரர்களும் கலந்துகொள்வர்

★

எம். ஜி. ராமச்சந்திரன் குழுவினர் நடிக்கும் 'இன்பக் கனவு'
எஸ். எஸ். ராஜேந்திரன் குழுவினர் நடிக்கும் 'சந்திரமோகன்'
நாடகங்கள் நடைபெறும்
தோழியர்கள் ஜி. கஸ்தூரி, கே. ஆர். சுந்தராம்பாள், தோழர் முருகேசன் குழுவினரின் இன்னிசை நடைபெறும்.

★

இரு நாட்களுக்கும் கட்டணம் (நாடகங்கள் உட்பட): ரூ. 5, 3, 1-8-0; பெண்களுக்கு அணா 8

குறிப்பு:—பொதட்டூர்பேட்டைக்குச் செல்ல சோளிங்கபுரம், அரக்கோணம், திருத்தணி, சித்தூர், நகரியிலிருந்து பஸ், ரயில் வசதியுண்டு.

உலக அரங்கில்

லண்டன் :

பிரிட்டிஷ் பிரதமர் சர்ச்சில் தனது அமெரிக்க சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு 'ராணி எலிசபெத்' என்ற கப்பலில் லண்டன் வந்து சேர்ந்தார்.

கெய்ரோ :

இந்தியப் பாராளுமன்ற உறுப்பினரும், உலக தொழிற்சங்க நிர்வாகக் குழுவின் உறுப்பினருமான கே. பி. திருபதி என்பவரை எகிப்து பிரதமர் அப்துல் நாசிர் கண்டு பேசினர். திருபதி கெய்ரோவில் உள்ள பல தொழில் நிலையங்களைக் கண்டு பேசினர்.

• • •

பிரிட்டிஷ் அதுவர் ஸ்டீவன்சன், எகிப்து வெளிநாட்டமைச்சர் டாக்டர் முகமது பாவ்சியைச் சந்தித்தார். சூயஸ் கால்வாய் பிரச்சினை பற்றி இருவரும் பேசினர்களாம்.

பாரிஸ் :

ஐசன்ஹோவரின் அழைப்பின் பேரில், பிரெஞ்சுப் பிரதமர் மெண்டே-பிரான்ஸ் அமெரிக்கா செல்வார் என்று நம்பப்படுகிறது. பிரயாணத்தின் தேதி இன்னும் நிச்சயமாகவில்லை.

* * *

ஹனேய் நகருக்கு வடக்கிலும் தெற்கிலும் 25 மைல் தூரத்தில் 70,000 வியட்மின் துருப்புகள் வந்துவிட்டன என்று தெரிகிறது.

வாஷிங்டன் :

அமெரிக்க சர்க்கார் மூன்று ரஷிய அதிகாரிகளை வெளியேறும்படி உத்திரவிட்டிருக்கிறது. மாஸ்கோவிலிருந்து அமெரிக்கத் தூதர் அலுவலகத்தைச் சேர்ந்த இரண்டு அமெரிக்கர்களை ரஷியா வெளியேறுமாறு உத்திரவிட்டிருக்கிறது.

பான் :

மேற்கு ஜெர்மனி - கிரீஸ் இரு நாடுகளிடையே வர்த்தக, பொருளாதார உறவு பற்றி ஆறு நாட்களாக இருநாட்டு அதிபர்களான அடினர், அலெக்சாண்டர் இடையே நடைபெற்றுவரும் பேச்சுவார்த்தைகளில் நல்ல முடிவு ஏற்பட்டிருக்கிறதாம்.

இரங்கூன் :

வடக்கு அரக்கான் பகுதிகளில் தனி நாடு தேவை என கிளர்ச்சி செய்யும் முஜாஹித்களை அடக்க பிரதேச முஸ்லிம் எதிர்ப்புப் படை ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது.

சியோல் :

சோவியத் கம்யூனிசத்தின் கொள்கை முறிபடுகிற எல்லா நாடுகளுக்கும் அமெரிக்கா தலைமை ஏற்று எதிர்ப்பு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தென்கொரிய சர்க்கார் அதிகாரியான டாக்டர் கார்ல் ஹாங்கி கூறினர்.

டுனிஸ் :

மூன்றுமாத காலமாக பதவி வகித்த முகமது சாலேயின் மந்திரி சபை இராஜினமா செய்துவிட்டது என்று தெரிகிறது.

* * *

டுனிஷியாவில் பாதுகாப்பு ஏற்பாடுகளை பலப்படுத்த மூன்று பிரெஞ்சு இராணுவ டிவிஷன் துருப்புகள் வந்திருக்கின்றன.

பாக்தாத் :

ஈராக் — ஈரான் இடையே கலாசார ஒப்பந்தமொன்று கையெழுத்தாகியது. இந்த ஒப்பந்தம் பத்து ஆண்டு காலம் நீடிக்கும் என்று தெரிகிறது.

வியன்னு :

ஹங்கேரி மந்திரி சபை சில காரணங்களுக்காக திருத்தியமைக்கப்பட்டிருக்கிறது என்று புடாபெஸ்ட் ரேடியோ அறிவித்தது.

பெர்லின் :

கிழக்கு ஜெர்மனியில் கம்யூனிஸ்டு சர்க்காரின் போக்கை எதிர்த்து, ஐரோப்பிய பாதுகாப்பு ஒப்பந்தத்திற்கு சாதகமாக 10 லட்சம் பேர் பொதுவாக்கெடுப்பின் போது வாக்களித்திருக்கின்றனர் என்று தெரிகிறது.

ஹாங்காங் :

மே 19-ம் தேதியுடன் முடிவடையும் ஐந்து மாத காலத்தில் பிரெஞ்சு இராணுவத்திலிருந்து 34,873 துருப்புகள் வெளியேறி வியட்மின் துருப்புகளுடன் சேர்ந்துவிட்டன என்று வியட்மின் ரேடியோ அறிவித்தது.

நைரோபி :

கென்யா சர்க்கார் 1948-ம் ஆண்டில் நிறைவேற்றிய குடிபெயர்ச் சட்டத்தைத் திருத்தப் போவதில்லை என்று அறிவித்திருக்கிறது. இச்சட்டம், ஆசிய மக்கள் கென்யாவில் குடியேறுவதைப் பற்றியதாகும்.

கேப் டவுன் :

பிரிட்டிஷ் மக்களின் இனவேற்றுமை கொள்கையை யாரும் பொருட்படுத்தத் தேவையில்லை என்று டாக்டர் மலான் ஆப்பிரிக்காவில் உள்ள ஆங்கிலேயர்களைக் கேட்டுக் கொண்டார்.

இலக்கியச் சொற்பொழிவு

★

8—7—54 மாலை 6 மணிக்கு

இடம் : பார்க் டவுன், மேமோரியல் ஹால்

தலைவர் : தோழியர் எஸ். கௌதம்

சொற்பொழிவாளர் : தோழர் இரா. நெடுஞ்செழியன்

தலைப்பு : கம்ப ராமாயணம் ?

நன்கொடை அணு 4

—தோழமைக் கழகம்

பிரிட்டிஷ் மக்கள் மலானின் நிறவெறியைக் கண்டிக்கிறார்கள்

நியூயார்க் :

நேரு-சூ-என்-லாய் பேச்சுவார்த்தைகள், உலகின் சிறந்த நிகழ்ச்சியாகும் என்று ஜோசப் ஹாரிஷ் என்பவர் கூறினர். சர்ச்சில்— ஐசன்ஹோவர் சந்திப்பைவிட நேரு-சூ-என்-லாய் சந்திப்பு சிறப்பு வாய்ந்ததென அவர் கருதுகிறார்.

குவாடிமாலா :

குவாடிமாலாவின் புதிய சர்க்கார் இதுவரை 2,000 கம்யூனிஸ்டுகளை சிறை பிடித்திருக்கிறதாம். சிறைகளில் இடமில்லாது போகவே புதிய சிறைகள் கட்டப்படுகின்றன என்று தெரிகிறது.

கொலராடோ :

கொலை, கொள்ளை போன்றவைகளையும், ஆபாசப் புத்தகங்களையும் குழந்தைகள் படிக்காமல் தடை செய்ய வேண்டுமென்று குழந்தைகள் கோர்ட் நீதிபதிகள் தேசிய கழகம் முடிவு செய்தது.

ஜினீவா :

கம்போடியாவில் போர் நிறுத்தம் செய்வது பற்றிப் பேச வியட்நாம் போடியப் பிரதிநிதிகள் ஜினீவா வந்து சேர்ந்தனர்.

* * *

இந்தோ—சீனு போர் நிறுத்தம் பற்றிய ஒன்பது நாடுகள் மாநாட்டில் 21-வது இரகசிய மாநாடு சோவியத் பிரதிநிதி தலைமையில் நடைபெற்றது. பேச்சுகளில் முன்னேற்றம் ஏதும் காணேம்.

செய்திக்கதிர்

★

புது வரி

திருமணங்களுக்கும், குழந்தைப் பேறுக்கும் வரி விதிக்க வேண்டுமென்று சிம்லாவில் கூடிய அகில இந்திய மாகாட்டில் யோசனை ஒன்று கூறப்பட்டதாம். ஆனால் அது ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

கட்டுப்பாடு

பருத்திக் கட்டுப்பாடு பற்றி இப்போது உள்ள ஏற்பாடு நீடிக்க வேண்டுமென்று பம்பாயில் கூடிய பருத்தி ஆலோசனை போர்டு கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

அரிசி விலை

மேற்கு வங்கத்தில் அரிசி விலை இறங்கி வருகிறதாம். இதனால் சர்க்கார் மிகவும் கவலைப்படுவதாகத் தெரிகிறது.

பிரசாரம்

நேரு, சூ-என்-லாய் கூட்டறிக்கையில் கண்டுள்ள கருத்துக்களை நாடு முழுமையும் பிரசாரம் செய்ய வேண்டுமென்று இந்தியாவின் எல்லா ராஜ்ய முதல் அமைச்சர்களுக்கும், பிரதேச காங்கிரஸ் தலைவர்களுக்கும் பண்டித நேரு சுற்றறிக்கை அனுப்பியிருக்கிறார்.

வேலை நிறுத்தம்

அவ்வளவு கோரிக்கைகளைக் கவனியாவிட்டால், ஜூலை 26-ம் தேதியிலிருந்து வேலை நிறுத்தம் செய்யப் போவதாக இந்திய கடற்படைத் துறைமுகத் தொழிலாளர் யூனியன் முடிவு செய்துள்ளது.

கல்லூரி

டாக்டர் கிப்பாத்திகளுக்குப் பயிற்சி அளிக்க சித்தவைத்திய நிசர்வ் பார்க்கில் கல்லூரி ஒன்று ஆரம்பிக்கப்படும் என்று தெரிகிறது. இச்செய்தியை நிசர்வ் பார்க் டைரக்டர் பி. ராமராவ் கூறினர்.

மீன் கல்லூரி

சென்னையில் மீன் கல்லூரி ஒன்றை அமைக்க முடிவு செய்யப்பட்டதைக் கண்ட சென்னை சர்க்கார் குழு ஒன்றை அமைத்திருக்கிறது.

ஏற்றுமதி

1954-ம் ஆண்டு இரண்டாவது பகுதிக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கும் பீடி சுருட்டும் இலை, பீடி புகையிலை ஏற்றுமதி கோட்டாக்களை ரத்து செய்வதென்று இந்திய சர்க்கார் முடிவு செய்துள்ளதாம்.

வேலை

ஆப்ரிக்காவிலிருந்து பிடிக்கப்பட்ட நூன்னூன் சர்க்கார் சிப்பந்திகளுக்கு அவர்கள் கோரிய நஷ்டஈடு கிடைத்திருந்தால் மீண்டும் வேலை தருவதென இந்திய சர்க்கார் முடிவு செய்திருக்கின்றனர்.

கைது

இந்தியப் பிரதேசத்தில் கள்ளத்தனமாய் வெட்டியதாக 21 பிரெஞ்சு இந்தியர்களை சென்னை போலீசார் கைது செய்திருக்கின்றனர்.

கடத்தல்

பிரெஞ்சிந்திய கவர்னருக்கு நேரடியாக நிலையங்களிலிருந்து சமீபத்தில் பூர்வமான ஏஜென்ட் புதுவை சர்க்கார் இரகசியமான இடங்களுக்கு அனுப்புகின்றனர்.

பாலத் திறப்பு

வேலூர் நகரசபையில் சேர்ந்த டாக்டர் வி. ராமசாமியின் உருவப் படத்தைக் கோனை தொழில் நிபுணர் ஜி. டி. நாயுடு திறந்து வைத்தார்.

கடன்

நகரசபைகளின் முக்கிய திட்டங்களை நிறைவேற்ற கடன் எழுப்பலாம் என்று மந்திரி அமைச்சர் கட்ஜு குண்டூரில் பேசுகையில் கூறினர்.

'நம் நாடு' வெளியூர் ஏஜண்டுகட்கு

"நம் நாடு" வெளியூர் ஏஜண்டுத் தோழர்கட்கு 1—7—54-ல் பில்கள் (வசூல் பட்டியல்) அனுப்பியிருக்கிறோம்: 10—7—54-க்குள் பில் பாக்கி பாக்கியுள்ளவர்கள் சேர்த்து கூடுதல் பாக்கித் தொகையையும் இங்கு அனுப்பிவைக்க வேண்டுகிறோம். டிபாசிட் தொகைக்கு மேல் பாக்கி ஏற்பட்டுள்ள தோழர்கட்கு முன் அறிவிப்பின்றியே 'நம் நாடு' அனுப்புவதை நிறுத்தப்படும் என்பதையும் அறிவித்துக்கொள்ளுகிறோம்.

தஞ்சாவூர், காஞ்சிபுரம் ஏஜண்டுகள் பாக்கியை அனுப்பாத காரணத்தினால் 'நம் நாடு' நிறுத்தப்பட்டிருக்கிறது என்பதையும் வருத்தத்துடன் தெரியப்படுத்திக்கொள்ளுகின்றோம்.

இராயபுரம், சென்னை-13
6—7—54

"நம் நாடு,"
பொறுப்பாளர்

1½-லட்சம் இந்தியரை வெளியேற்ற கொத்தலாவலை யோசனை!

அது பற்றி இந்தியா கலைப்படவில்லையாம்!

கொழும்பு, ஜூலை 6—

இலங்கையில் வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைக்க 1,50,000 இந்தியர்களை வெளியேற்றி இந்தியாவுக்கு அனுப்ப தான் ஆலோசிப்பதாக இலங்கைப் பிரதமர் கொத்தலாவலை அம்பலங்கடா என்ற இடத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் கூறினர்.

இந்தியத் தூதவர் நேருயின் கணக்குப்படி இலங்கையில் வசிக்கும் இந்தியப் பிரஜைகளின் எண்ணிக்கை 90,000 ஆகும். இவர்களை 10 - ஆண்டு காலத்திற்குள் இந்தியாவுக்கு ஆண்டுதோறும் கொஞ்சம் கொஞ்சமாக திருப்பி அனுப்புவதாகக் கொண்ட இந்திய ஏற்கனவே சம்மதமளித்திருக்கிறது.

கொத்தலாவலை குறிப்பிடும் 1½ லட்சம் பேரில் இந்திய பாஸ்போர்ட்கள் வைத்திருப்போரும் சேர்ந்தவர்களே!

மேலும், பிரஜா உரிமை மனுக்கள் நிராகரிக்கப் பட்டவர்கள், குறித்த நேரத்தில் மனு போடத் தவறியவர்கள் 1949-க்கு முன் இலங்கைக்குச் சென்றவர்கள்—ஆனல் பாஸ் போர்ட் ஏதும் இல்லாதவர்கள்; இவர்களும் அந்த ஒன்றரை லட்சம் பேரில் சேர்ந்தவர்கள்.

பின்னும் குறிப்பிடப்பட்டவர்கள் சம்பந்தமாகத்தான் டில்லி ஒப்பந்தத்தின் கீழ் முதியோர் பல் அறிவுப் பட்டியல் தயாரிப்பதென யோசனை ஏற்பட்டது. இவ்விதம் பதிவு செய்யப்படாதவர்களின் தாய்மொழி இந்திய மொழியாக இருந்தால் அந்தவர் இந்தியாவிலிருந்து கள்ளத்தனமாகக் குடியேறியதாகக் கருதப்பட்டு இந்தியாவுக்கு திருப்பி அனுப்பப்பட வேண்டுமென்பது ஏற்பாடு. இந்த நடவடிக்கையில் இந்திய சர்க்காரும் ஒத்துழைக்க வேண்டும்.

இந்திய சர்க்கார் நிலை

ஒன்றரை லட்சம் இந்தியர்களை வெளியே அனுப்புவது பற்றிய கொத்தலாவலையின் சொற்பொழிவு கண்டு இந்திய சர்க்கார் கவலைப்படவில்லை இவ்வளவு மக்களை வெளியில் அனுப்புவதால் இலங்கைக்கு எவ்வளவு தொல்லைகள் வருமென்பதை இந்திய சர்க்கார் உணர்ந்திருக்கின்ற காரணத்தாலும், இந்தியப் பிரஜை அல்லாதாரை திருப்பி அனுப்பினால் ஏற்றுக் கொள்ள இயலாது என்பதை முன்னமே இலங்கைக்கு அறிவித்து விட்டிருக்கிற படியாலும், கொத்தலாவலையின் பேச்சு டில்லியில் பரபரப்பூட்டவில்லை மேலும் அவர்களைப் பதிவு செய்ய இலங்கை மறுக்குமென்றால் அப்பிரச்சினையை இலங்கை அரசாங்கம் பேசித் தீர்த்துக் கொள்ள வேண்டியது அந்த மக்களின் பொறுப்பு என்று டில்லி சர்க்கார் கருதுகிறது.

மசோதா நிறைவேற்றம்

இந்தியப் பூர்வீகம் உள்ள பதிவு செய்து கொண்ட பிரஜைகளுக்கு சட்ட சபையில் பிரதிநிதித்துவம் அளிக்க இலங்கை சர்க்கார் கொண்டு வந்திருக்கும் மூன்று திருத்த மசோதாக்களில் முதல் மசோதாவை இலங்கைப் பிரதிநிதிகள் சபை நிறைவேற்றியது.

ஒரு வகுப்புக்கும் மற்றொரு வகுப்புக்கும் இடையே வித்தியாசம் காட்டக்கூடாது என்ற அரசியல் சட்ட விதிக்கு, இந்தியப் பூர்வீகமுள்ள பதிவான பிரஜைகளுக்கு விலக்களிக்க வேண்டுமென்பதே முதல் மசோதா.

இம்மசோதா நிறைவேறியதால் மற்ற இரு மசோதாக்களும் நிறைவேற்றப்படலாம்.

பிரதிநிதிகள் சபை எண்ணிக்கையை 105 - ஆக நிர்ணயித்து, இலங்கை பிரஜைகளுக்கு 4 இடங்கள் ஒதுக்குவது என்பது இரண்டாவது மசோதா.

250-க்கு அதிகமாக பதிவான வர்கள் உள்ள தொகுதியில் இவர்கள் தனித் தொகுதியில் வைப்பது என்பது மூன்றுவது மசோதா ஆகும். நிறைவேற்றப்பட்ட மசோதாவை எதிர்த்து, பண்டாரநாயகா சுந்தரலிங்கம் ஆகியோர் இலங்கைப் பிரதிநிதி சபையில் பேசினர். மசோதா வுக்கு ஆதரவாக 71-ம், எதிராக 17 வாக்குகளும் கிடைத்தன என்று தெரிகிறது.

இப்பத்திரிகை நம் நாடு அச்சகத்தார் சார்பாக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது (24, நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்படுகிறது. ஆசிரியர் : சி. என். அண்ணாதுரை, எம். ஏ.

கழகக் கூட்டங்கள்

நுங்கம்பாக்கம்

சிற்றரசு சதுக்கத்தில்
9—7—54 மாலை 6 மணிக்கு
தலைவர் : என். நடராசன்
பேசுவோர் :
ஈ. வே. கி. சம்பத்
எஸ். அப்பாவு

★

கோ. ஆத்தூர்

விநாயகர் கோவில் சமீபம்
9—7—54 மாலை 6 மணிக்கு
தலைவர் : என். பரமசிவம்
பேசுவோர் :
சி. பி. சிற்றரசு
முருகேசனர்
பேபி இளங்கோ

திருமணம்

9—7—54 காலை 8 மணிக்கு, சென்னை, இராயபுரம், முனியப்ப செட்டி சந்து, 2-ம் எண்ணுள்ள இல்லத்தில், தோழர் முனுசாமி—தோழியர் தனலட்சுமி திருமணம் தோழர் காஞ்சி-கல்யாணசுந்தரம் தலைமையில் நடைபெறும். தோழர்கள் என். ஜீவரத்னம், கலைச்செல்வன் ஆகியோர் வாழ்த்துக் கூறுவர்.